**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 108 of 2021

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.சென்னம்மாள்

Date : 29.01.2026

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொத்து வேண்டும் என்று இந்த வழக்கு போட்டுள்ளேன். மூதாதையர் சொத்துக்கள் குறித்து நான் பாகம் கேட்கிறேன். என் அப்பா திருமலைகவுண்டர் இறந்து 15 வருடங்களாகிறது. என் தாத்தா பெயர் சென்னப்பன், அவர் இறந்து விட்டார். என் தாத்தாவிற்கு இரண்டு மகள்கள், ஒரு மகன். அவர்கள் பெயர் சென்னம்மாள், சின்னகண்ணு. அவர்கள் இருவரும் இறந்து விட்டார்கள். வழக்கு போடுவதற்கு முன்பாகவே அவர்கள் இறந்து விட்டார்கள். சென்னம்மாவிற்கு இரண்டு மகன்கள், சின்னகண்ணுவிற்கு ஒரு மகன், இரண்டு மகள்கள். சென்னம்மாள், சின்னகண்ணுவின் மகன், மகள்களை இந்த வழக்கில் தரப்பினராக சேக்கவில்லை என்றால் சரிதான். என் தாத்தா சென்னப்பன் அவருடைய தந்தைக்கு ஒரே ஆண் வாரிசு என்றால் சரிதான். என் தாத்தா சென்னப்பனுக்கு என் அப்பா ஒரே ஆண் வாரிசு என்றால் சரிதான். என் தாத்தா எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது.

2) தாவா சொத்துக்கள் என் தாத்தா சென்னப்பனுக்கு அவர் குடும்பத்தில் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள். என் தாத்தா பெயரில் உள்ள சொத்துக்களுக்கு ஆவணம் எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சென்னகிருஷ்ணன் வழக்கு போடுவதற்கு முன்பாகவே இறந்து

விட்டார் என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி 40 வருடங்கள் இருக்கும். 2, 3 வாதிகளுக்கு எனக்கு திருமணமான 2, 3 வருடங்களில் அவர்களுக்கு திருமணமானது. வாதிகளாகிய நாங்கள் திருமணமாகி அவர் அவர் கணவர் வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் அப்பாவிட்டு சென்ற சொத்துக்களை 1, 2 பிரதிவாதிகள் சொத்துக்களை ஓட்டி வருகிறார்கள் என்றால் சரிதான், ஆனால் பாகபிரிவினை ஆகவில்லை. 1, 2 பிரதிவாதிகள் பாகபிரிவினை ஆன பிறகு தான் தனித் தனியாக ஓட்டி வருகிறார்கள் என்றால் சரியல்ல.

3) 5ம் பிரதிவாதி சக்திவேல் 1ம் பிரதிவாதியின் மகன். என் அப்பா உயிருடன் இருக்கும் போதே 5ம் பிரதிவாதிக்கு 05.12.1994ல் ஒரு சொத்தை விற்றிருக்கிறார் என்றாலும், 04.07.2008 ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் எங்களுக்கு தெரியாமல் எழுதி கொடுத்துள்ளார். சக்திவேல் அவருக்கு கிரைய பத்திரம், தானபத்திரம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களை தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் என்றால், தனிப்பட்ட முறையில் அனுபவிக்கமுடியாது. என் அப்பா கோவிந்தன், சந்திரனுக்கு சொத்தை விற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்துக்களை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சொத்துக்கள் விற்கப்பட்டு விட்டதால் இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை. 5ம் பிரதிவாதிக்கு என் அப்பா சொத்தை தானமாக சொத்துக்களை கொடுத்துள்ளார் என்றாலும், சொத்துக்களை விற்றுள்ளார் என்றாலும் அந்த சொத்துக்களில் பாகம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. மாதையன் என்பவருக்கு என் அப்பா சொத்தை விற்றுள்ளார் என்றால் எனக்கு

தெரியாது. மாதையனுக்கு சொத்தை விற்ற விவரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாதையனுக்கு விற்ற சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

*4)* என் அப்பா திருமலைகவுண்டருக்கு இந்து வாரிசுமை சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பாகவே சொத்துக்கள் அவருக்கு பாத்தியப்பட்டு விட்டதால் தாவா சொத்துக்கள் அவரது தனிப்பட்ட சொத்துக்களாகிறது என்றால் சரியல்ல. சொத்துக்கள் என் அப்பாவின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் தான் என் அப்பா 5ம் பிரதிவாதிக்கு தானபத்திரம் மூலமாகவும், கிரைய பத்திரம் மூலமாகவும் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றாலும் அந்த ஆவணங்கள் என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி பெயரில் உள்ள தானபத்திரம், கிரைய பத்திரம் செல்லாது என்று கேட்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதிக்கு தானபத்திரம், கிரைய பத்திரம் மூலமாக பாத்தியப்பட்ட சொத்துக்களை தவிர தான் எனக்கு பாகம் கேட்க உரிமையுள்ளது என்றால் சரியல்ல. *8*ல் *1* பாகம் வேண்டும் என்று நான் கேட்டிருக்கும் பாக விகித்தாச்சாரம் தவறு என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருக்கும் போதே என் அப்பா கிரைய பத்திரம் மூலமாகவும், தானபத்திரம் மூலமாக ஏற்படுத்தி கொடுத்த விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும், தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5)** இந்த வழக்கில் அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினாலும், அனைத்து சொத்துக்களையும் சேர்க்காத காரணத்தினாலும் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. **5**ம் பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் மூலமாகவும், தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலமாகவும் ஏற்பட்ட சொத்துக்கள் அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு முறையாக தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L
Additional District Judge,
Dharmapuri.